**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 44/2019**
**எ.த.சா. 2 – திரு. திரு. M. ராஜமுருகன்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026.

* * * * * * *

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5–வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS இன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வழக்கமாக எங்கள் அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு வருகைப் பதிவேடு முற்றிலுமாக பதிவு செய்யப்படும் என்றால், சரிதான். வழக்கின் எதிரி பாண்டீஷ்வரி கையொப்பம் போட்டுள்ளதாகச் செல்லும் பதிவேட்டே சரிபார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி கண்காணிப்பாளர் என்றால், சரிதான். நான் அந்தசமயத்தில் அலுவலகத்தில் வட்டாரக் கல்வி அலுவலராகப் பணிபுரிந்தேன். வருகைப் பதிவேடு நேரடியாக எனது கண்காணிப்பில் இருக்குமா? என்றால், இல்லை. எனது சொந்த ஊர் மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, சாப்டூர் கிராமம் ஆகும். தற்போது, நான் பி.சி. பட்டியில் வசித்து வருகிறேன். பூதிப்புரத்திலிருந்து 09.00 மணிக்கு கிளம்பினால்தான் எதிரி பாண்டீஸ்வரி எங்களது அலுவலகத்திற்கு 10.00 மணிக்கு வரமுடியும் என்று, நான் கூறியிருப்பது அவருக்கு ஆதரவாக வழக்கிலிருந்து அவரை விடுவிக்க பொய்யாக சொல்லிய சாட்சியம் என்றால், சரியல்ல. வழக்குச் சம்பவம் 09.00 மணிக்கு நடந்திருப்பதால், எந்த ஊரிலிருந்து எங்கு வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்ற விவரம் சரியாகத் தெரியவராமல், எதிரிக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.15 18:55:39 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**